# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண்: 83 /பேரூ/2023**
**நாள் : 11.07.2023**

திரு .V.செந்தமிழ்சேகர்
தூத்துக்குடி மாவட்டம் ... மனுதாரர்

செயல் அலுவலர்,
கானம் பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம் .... எதிர்மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், கானம் பேரூராட்சி 9வது வார்டு உறுப்பினர், கானம் கஸ்பா, 7/88, மேலத்தெரு, என்ற முகவரியைச் சேர்ந்த திரு.V.செந்தமிழ்சேகர் என்பவரது 28.03.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.03.2023 அன்று பெறப்பட்டு, 83/பேரூ/2023 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தூத்துக்குடி மாவட்டம், கானம் கஸ்பா, கானம் பேரூராட்சி, 7/88, மேலத்தெரு என்ற முகவரியில் வசிக்கும் கானம் பேரூராட்சி 9வது வார்டு உறுப்பினர் திரு .V.செந்தமிழ்சேகர் என்பவர் தனது புகார் மனுவில்

> "கானம் பேரூராட்சி 8வது வார்டு மற்றும் 9வது வார்டு மேற்கு எல்லையான கானம் குளக்கரை சாலை (நீல்புரம் – வள்ளிவிளை இணைப்பு சாலை) பணி பற்றிய குறைபாடுகளை குறித்த புகார் மனு 21.06.2022 சாதாரணக் கூட்டப் பொருள் 6ல் விவாதிக்கப்பட்டு, 2021–2022 ஆம் ஆண்டிற்கான " நபார்டு திட்டத்தின் கீழ்" நீல்புரம் முதல் வள்ளிவிளை சிறுபாலம் வரை தடுப்புச் சுவருடன் கூடிய தார்சாலை அமைத்தல் பணி ரூ.251.00 லட்சம் மதிப்பீட்டில் ஸ்ரீபார்வதி முருகா கன்ஸ்ட்ரக்சன் என்பவருக்கு பணி ஒப்பந்தம் 07.05.2022 அன்று முன்அனுமதி வழங்கப்பட்டது.

மேற்படி ஸ்ரீ பார்வதி முருகா கன்ஸ்ட்ரக்ஷன் எந்தவித ஒப்பந்த வழிகாட்டு நெறிமுறைகளையும் பின்பற்றாமல் அதாவது பணி பற்றிய தகவல் விபர விளம்பர பலகை ஏதும் நடப்படாமலும், சாலையை சமன் செய்யும் (எர்த் ஒர்க்) வேலையை முறையாக பின்பற்றாமலும், இன்றுவரை சாலையின் ஓரத்தில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணியை நடைமுறைபடுத்தாமலும், ஏனோ தானோ என்று இரு பக்கமும் உள்ள முள் செடிகளை அகற்றாமல் தார் சாலையை மட்டும் போட்டுள்ளார்கள். அதே இடத்தில் சாலையின் இருபுறங்களிலும் ஆபத்தான குழிகளை தோண்டி அதில் கிடைக்கும் மணலை கொண்டு மேற்படி தார்சாலை அமைக்கும் பணிக்கு பயன்படுத்தியுள்ளார்கள். இதனால் வாகன ஓட்டிகள் ஒரு வண்டி வந்தால், மறு வண்டி விலகி வருவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். புதியதாக சாலையின் ஓரங்களில் மேடு பள்ளங்களை சரி செய்ய சரள் மண் ஏதும் போடப்படவில்லை. ஆக மொத்தம் நபார்டு நிதி மொத்தமாகவும் வீண் விரயம் செய்யும் வேலையை இந்த ஸ்ரீ பார்வதி முருகா கன்ஸ்ட்ரக்ஷன் என்பவர், பேரூராட்சியின் பொறியாளர் மற்றும் உதவி இளநிலை பொறியாளர், செயல் அலுவலர் ஆகியோர்களின் துணையோடு செய்து கொண்டு வருகிறது. அதிகாரிகளை வைத்து மேற்படி சாலையை ஆய்வு செய்தால் உண்மைநிலை தெரியும்.

எனவே ஐயா அவர்கள் பேரூராட்சியின் ஒப்பந்தக்காரரான ஸ்ரீ பார்வதி முருகா கன்ஸ்டரக்சன் மீதும், மேற்படி பணிகளை கண்காணிக்க வேண்டிய பொறுப்புள்ள பேரூராட்சியின் பொறியாளர், உதவி இளநிலை பொறியாளர் மற்றும் செயல் அலுவலர் ஆகியோர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுத்து மேற்படி ஸ்ரீ பார்வதி முருகா கன்ஸ்ட்ரக்ஷனின் ஒப்பந்தத்தை ரத்து செய்து புதிய நல்ல ஒப்பந்தக்காரரை வைத்து தடுப்புச்சுவருடன் கூடிய தரமான தார்சாலையை அமைக்க ஆணையிட வேண்டும் என்று மிகவும தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 10.04.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் கானம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) கானம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 02.05.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

"கானம் பேரூராட்சி நபார்டு 2021–2022 திட்டத்தின் கீழ் நீல்புரம் முதல் வள்ளிவிளை சிறுபாலம் வரை தடுப்புச்சுவருடன் கூடிய தார்சாலை அமைத்தல் பணி ரூ.251.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் திட்டப்பணி குறித்த விவரங்கள் அடங்கிய பலகை தார்சாலை அமைக்கும் பணி தொடங்கும்போது வைக்கப்பட்டுள்ளது. மேலும் சாலையின் இருபுறமும் முள்செடிகள் சூழ்ந்திருந்த காரணத்தினால் JCB இயந்திரம் மூலம் முள்செடிகள் அகற்றப்பட்டு சாலையை சமன் செய்யும் (எர்த் ஒர்க்) பணி மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளபடி முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. பணி மேற்கொள்ளப்படும் சாலையின் அருகில் கானம் குளத்தில் நீர் வற்றாத காரணத்தினால் தடுப்புச்சுவர் கட்ட காலதாமதமானது.

தற்போது கோடை காலம் துவங்கிவிட்டதாலும் குளத்தில் நீர் வற்றி வருவதாலும் தடுப்புச்சுவர் அமைக்க மண் தோண்டும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி தார்சாலை அமைக்க மணல் தேவையில்லை; சாலையின் இருபுறங்களிலும் மதிப்பீட்டில் உள்ளபடி தடுப்புச்சுவர் பணி முடிந்தபின்னர் சரள் விரிக்கப்படும். இப்பணி மதிப்பீட்டில் உள்ளபடி WMM 150mm, DBM 50mm மற்றும் BC 30mm கனத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணியினை திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் செயற்பொறியாளர் மற்றும் தூத்துக்குடி மாவட்ட உதவி செயற்பொறியாளரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் இப்பணிக்கு தாருக்கு பயன்படுத்தப்பட்ட DBM & BC தார் கலவையினை திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரி பொறியியல் வல்லுநரால் தரச்சான்று பெறப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவத்திற்கு 08.06.2023 அன்றைய விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. மனுதாரர் 08.06.2023 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை.

கானம் பேரூராட்சியின் செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தின் 8.6.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:-

தூத்துக்குடி மாவட்டம், கானம் பேரூராட்சி நீல்புரம் முதல் வள்ளிவிளை சிறுபாலம்வரை தடுப்புச் சுவருடன் கூடிய தார்சாலை அமைக்கும் பணி 2.51 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது. சாலையின் நீளம் 2.2 கிலோமீட்டர் ஆகும். மேற்கண்ட பணிக்கான ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படியே கோரப்பட்டது. தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் ஒப்பந்தப்புள்ளி குறித்து விளம்பரம் செய்யப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். விளம்பரம் செய்யப்பட்டதன் நாளிதழ் துணுக்கின் நகல் இம்முறை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், இரு ஒப்பந்ததாரர்கள் மட்டுமே ஒப்பந்தப் புள்ளியை அளித்திருந்தனர். மேற்கண்ட இருவரும் அளித்துள்ள விலைப்புள்ளியில் உள்ள விவரங்கள் குறித்து இளநிலை பொறியாளரால் சரிபார்த்து குறைந்த விலைப்பட்டியல் உள்ள ஒப்பந்ததாரர் பார்வதி முருகா கன்ஸ்ட்ரக்ஷன் என்பவருக்கு ஒப்பந்தம் வழங்க தெரிவிக்கப்பட்டதின் பேரில் ஒப்பந்தம் வழங்கப்பட்டது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்ட பணிகள் நடைபெறும்போது பணிகள் குறித்த விவரங்கள் அடங்கிய பலகை பணிகள் நடைபெறும் இடத்தில் வைக்கப்பட்டுள்ளது எனவும் சாலையின் இருபுறமும் முள்செடிகள் மண்டியிருந்த நிலையில், ஜே சி பி இயந்திரம் மூலம் முட்செடிகள் அகற்றப்பட்டு சாலையை சமன் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் மேற்கண்ட இடத்தில் தற்போது வேலை நடைபெற்றுவருகிறது எனவும் மேற்கண்ட சாலைப் பணிகள் நடைபெறும்போது கானம் குளத்தில் நீர் வற்றாத காரணத்தாலும் தொடர் மழை பெய்ததாலும் மண் சரிந்து உள்ளே விழுவதாலும் தடுப்புச் சுவர் கட்ட காலதாமதமானது என்கின்ற

விவரத்தையும், மேலும் சாலைப் பணிகள் ஏற்கனவே முடிவுற்றது என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளும்போது அங்குள்ள கானம் குளத்தில் நீர் ஊற்று அதிகரித்த நிலையில் ஒப்பந்ததாரரால் குறித்த காலத்தில் அதாவது 17.2..2023க்குள் முடிக்க இயலவில்லை என தெரிவித்து 8.2.2023 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்திருந்த நிலையில், கானம் பேரூராட்சி இளநிலை பொறியாளரின் அறிவுரையின்படி 10.2.2023 நாளிட்ட செயல்முறையில், நிபந்தனையில் குறிப்பிட்டுள்ள கால அளவுக்கு மேல், 17.2.2023 முதல் 31.7.2023வரை கால அவகாசம் ஒப்பந்ததாருக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற நேர்வுகளில் கால அவகாசம் நீட்டிப்பு யார் அளவில், எத்தகைய அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என்பது குறித்த விவரம் எனக்கு தெரியவில்லை.

மேலும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 28.4.2023 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்

8.6.2023 அன்று மனுதாரர் கலந்து கொள்ளாத நிலையில் இம்முறைமன்ற நடுவத்தின் 8.6.2023 நாளிட்ட அழைப்பாணையில் 14.6.2023 பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெறவிருந்த நேரடி விசாரணையில் கலந்து கொள்ள மனுதாரருக்கு மீண்டும் அழைப்பு விடுவிக்கப்பட்டது. ஆனால் 14.6.2023 அன்று நடைபெறவிருந்த விசாரணையிலும் மனுதாரர் திரு .V.செந்தமிழ்சேகர் ஆஜராகவில்லை.

28.6.2023 அன்று நாகர்கோயில் முகாம் அலுவலகத்தில் நடைபெறும் நேரடி விசாரணையில் கலந்து கொள்ள இம்முறைமன்ற 22.6.2023 நாளிட்ட அழைப்பாணை மூலம் மனுதாருக்கு தெரிவிக்கப்பட்டது. மூன்றாவது அவகாசமாக அளிக்கப்பட்ட நிலையில் 28.06.2023 நாளிட்ட விசாரணையிலும் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகவில்லை.

இந்நிலையில் மனுதாரரின் புகார் மனு, கானம் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் பரிசீலிக்கப்பட்டன.

தூத்துக்குடி மாவட்டம், கானம் பேரூராட்சியில் 2021–2022ஆம் ஆண்டிறகான நபார்டு திட்டத்தின்கீழ் நீல்புரம் முதல் வள்ளிவிளை சிறுபாலம் வரை ரூபாய் 251 இலட்சம் மதிப்பீட்டில் தடுப்புச் சுவருடன் கூடிய தார்சாலை அமைக்கும் பணிக்கு ரூ.24.03.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, மதிப்பீடு தொழில் நுட்ப தகுதி அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஸ்ரீ பார்வதி முருகா கன்ஸ்ட்ரக்ஷன் என்பவரது ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டு, மன்ற ஒப்புதல் பெறப்பட்டு பணிஉத்தரவு வழங்கப்பட்டுள்ளது. புகார் மனுதாரர் தமது மனுவில் மேற்படி பணி நடைபெறும்போது ஒப்பந்ததாரர் எவ்வித ஒப்பந்த வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றாததால் மேற்கண்ட ஸ்ரீபார்வதி முருகா கன்ஸ்ரக்ஷனின் ஒப்பந்தத்தை ரத்துசெய்து புதிய ஒப்பந்ததாரரை வைத்து தடுப்புச் சுவருடன்கூடிய தரமான தார்சாலை அமைக்க ஆணையிட இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

A. தூத்துக்குடி மாவட்டம், கானம் பேரூராட்சி நீல்புரம் முதல் வள்ளிவிளை சிறுபாலம்வரை தடுப்புச் சுவருடன் கூடிய தார்சாலை அமைக்கும் பணி 2.51 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது. சாலையின் நீளம் 2.2 கிலோமீட்டர் ஆகும். மேற்கண்ட பணிக்கான ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படியே கோரப்பட்டது. தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் ஒப்பந்தப்புள்ளி குறித்து விளம்பரம் செய்யப்பட்டது

B. ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், இரு ஒப்பந்ததாரர்கள் மட்டுமே ஒப்பந்தப் புள்ளியை அளித்திருந்தனர்.

C. ஒப்பந்ததாரர் பார்வதி முருகா கன்ஸ்ட்ரக்ஷன் என்பவருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது

D. மேற்கண்ட பணிகள் நடைபெறும்போது பணிகள் குறித்த விவரங்கள் அடங்கிய பலகை பணிகள் நடைபெறும் இடத்தில் வைக்கப்பட்டுள்ளது எனவும் சாலையின் இருபுறமும் முள்செடிகள் மண்டியிருந்த நிலையில், ஜே சி பி இயந்திரம் மூலம் முட்செடிகள் அகற்றப்பட்டு சாலையை சமன் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும்

E. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளும்போது அங்குள்ள கானம் குளத்தில் நீர் ஊற்று அதிகரித்த நிலையில் ஒப்பந்ததாரரால் குறித்த காலத்தில் அதாவது 17.2..2023க்குள் முடிக்க இயலவில்லை

F. 10.2.2023 நாளிட்ட செயல்முறையில், நிபந்தனையில் குறிப்பிட்டுள்ள கால அளவுக்கு மேல், 17.2.2023 முதல் 31.7.2023வரை கால அவகாசம் ஒப்பந்ததாரருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் (மற்றும்) விதிகளில் இம்முறைமன்ற நடுவத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:-

பிரிவு 7 " The Ombudsman shall perform all or any of the following functions namely:-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) pass an order on the proved allegation in the following manner, namely

(a) xx

(b) xx

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules.

அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

கானம் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் ஆவணங்களை பரிசீலிக்கையில்:-

- நீல்புரம் முதல் வள்ளிவிளை சிறுபாலம் வரை தடுப்புச்சுவருடன்கூடிய தார்சாலை அமைக்கும் பணிகள் நடைபெறும்போது பணிகள் குறித்த விவரங்கள் அடங்கிய விளம்பரப்பலகை பணிகள் நடைபெறும் இடத்தில் வைக்கப்பட்டுள்ளது.

- சாலையின் இருபுறமும் முள்செடிகள் மண்டியிருந்த நிலையில் ஜேபிசி இயந்திரம் மூலம் முட்செடிகள் அகற்றப்பட்டு சாலையை சமன் செய்யும் பணி நடைபெற்றுள்ளது என்பது விசாரணையின்போது அளிக்கப்பட்ட புகைப்படத்தின் மூலம் தெரிகிறது.

- கானம் குளத்தில் நீர் வற்றாத காரணத்தாலும் தொடர்மழை பெய்து வந்ததாலும் மண்சரிந்து உள்ளே விழுந்தபடியால் தடுப்புச்சுவர் கட்டுவதற்கு தாமதமானது என்றும் தெரியவருகிறது.

- மேலும் பணிகள் மேற்கொள்ளும்போது கானம் குளத்தில் நீர்ஊற்று அதிகரித்த நிலையில் ஒப்பந்தப்பணியை குறித்த காலத்திற்குள் அதாவது 17.2.2023க்குள் முடிக்க இயலவில்லையென ஒப்பந்ததாரர் தமது 8.2.2023 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்திருந்த நிலையில் கானம் பேரூராட்சி செயல் அலுவலரின் 10.02.2023 செயல் முறைகளின்படி 17.2.2023 முதல் 31.7.2023 வரை பணியின் கால அளவை நீட்டித்து ஒப்பந்ததாரருக்கு காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

- எனவே புகார் மனுதாரர் குறிப்பிட்டதுபோல், ஒப்பந்தவிதிமுறைகளை பின்பற்றாமல் பணிகள் நடைபெறுகிறது என்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல என்பது தெளிவாகிறது. எனவே இந்நேர்வில் சாலைப்பணிகள் ஏற்கனவே முடிவுற்ற நிலையில், தடுப்புச்சுவர் கட்டும்பணியை கண்காணித்து நீட்டிக்கப்பட்ட குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நீல்புரம் முதல் வள்ளிவிளை சிறுபாலம் வரை தடுப்புச்சுவருடன்கூடிய தார்சாலை அமைக்கும் பணியை பொதுமக்கள் பயன்பெறும் வகையில் முழுமையாக செய்து முடிக்க கானம் பேரூராட்சி பொறியாளர் மற்றும் செயல் அலுவலருக்கு அறிவுறுத்தலாமென முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

"The Engineering Manual for Urban Local Bodies in Tamil Nadu issued by Municipal Administration and Water Supply Department, Government of Tamil Nadu, Chapter – III, in the heading "Extension of time" reads as follows:

**EXTENSION OF TIME:**

3.5 As the time is the essence of the contract sanction of extension of time must be an exception rather than a rule. Where it becomes necessary the contractor must apply for extension of time before the expiry of the contract period giving reason for the unavoidable delay that had occurred in the work, hindrances if any and other unforeseen causes beyond the control of the contractor, Such extension of time shall be got sanctioned by the Municipal Engineer or other appropriate authorities Final bills of contractors shall not be paid without sanction of extension of the Letter

sanctioning extension of time should make it clear that the **sanction is subject to condition that no claim of increase in rates will be allowed Regional Executive Engineer shall have power to sanction extension of time upto 50% of contract period Extension of time beyond 50% shall be sanctioned by the S.E.**

மேற்குறிப்பிட்ட கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஒப்பந்த காலஅளவில் 50 விழுக்காடு வரை நீட்டித்து அனுமதி ஆணை வழங்க மண்டல செயற்பொறியாளர் அளவிலும் அதற்கு மேல் அதாவது ஒப்பந்த காலஅளவில் 50 விழுக்காட்டிற்கு மேல் காலஅளவை நீட்டித்து ஆணை வழங்க கண்காணிப்புப் பொறியாளர் அளவிலும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நேர்வில் ஒப்பந்த கால அளவை நீட்டித்து கானம் பேரூராட்சி செயல் அலுவலரே அனுமதி வழங்கியுள்ளார் என தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில் மேற்குறிப்பிட்ட செயல் அவரது அதிகார வரப்பிற்கு மீறிய செயலாகும். எனவே இந்நேர்வில் தனது அதிகார வரம்பை மீறி கூடுதலாக 5 மாதங்கள் ஒப்பந்தப்புள்ளி காலஅளவை நீட்டித்து ஆணை பிறப்பித்த கானம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் இந்நேர்வில் தவறாக அறிவுரைகள் வழங்கிய கானம் பேரூராட்சி இளநிலை பொறியாளர் மீதும் நடைமுறையிலுள்ள விதிகளின்படி துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அறிவுத்தலாமென இம்முறைமன்றம் முடிவுசெய்து, அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும் கானம் பேரூராட்சியால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான அனைத்து பட்டியல்களையும் (Bills) உள்ளாட்சி தணிக்கைத்துறை மூலம் ஆய்வு செய்து அறிக்கையினை சமர்ப்பிக்க உள்ளாட்சித் நிதித்தணிக்கைதுறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இவ்வறிக்கையின் அடிப்படையில் மட்டும் நிதியினை விடுவிக்க வேண்டும் என்று கானம் பேரூராட்சி செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

மேலும், இம்முறைமன்றத்திற்கு புகார் மனு அளித்து அம்மனுமீது 8.6.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரில் ஆஜராக வேண்டி அழைப்பாணை அளித்தும் 8.6.2023 அன்று ஆஜராகாமல் மனுதாரரால் காலஅவகாசம் கேட்கப்பட்ட நிலையில் 14.06.2023 மற்றும் 28.6.2023 ஆகிய நாட்களில் அழைப்பாணை அனுப்பிய நிலையில் மனுதாரர் விசாரணையில் கலந்து கொள்ளாதது இம்முறைமன்றத்தின் மாண்பைகுறைக்கும் செயலாகக் கருதி மனுதாரரை இம்மன்றம் வன்மையாக கண்டிக்கிறது. மேலும் 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் இம்முறைமன்றத்திற்கு உரிமையியல் நீதிமன்ற அந்தஸ்தை வழங்கியுள்ள நிலையில் இம்முறைமன்றத்தில் புகார் மனு அளித்து, அம்மனுவினை மீதான விசாரணையில் ஆஜராகாமல் இருந்ததையும், மேலும் இம்முறைமன்றத்தின் நேரத்தையும் விணடித்ததை கருத்தில் கொண்டும், மனுதாரால் இம்முறைமன்றத்திற்கு அளிக்கப்படும் புகார் மனுக்கள் 6 (ஆறு) மாதகாலத்திற்கு ஏற்கப்படாது என முடிவு செய்து, அவ்வாறே இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

The Director of Town panchayats is directed to ensure compliance with the orders of this Forum by the Executive Offfcer,Kanam Town panchayat scrupulously without any delay and dilution. The Assistant Director of Town panchayats Thoothukudi is directed to scrutinize the records of this work under dispute and initiate

necessary action against the delinquent officials concerned, if any lapses and omissions are detected.

2023-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 11-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு .V.செந்தமிழ்சேகர்
9வது வார்டு உறுப்பினர்,
கானம் பேரூராட்சி,
7/88, மேலத்தெரு,
தூத்துக்குடி மாவட்டம்

2. செயல் அலுவலர்,
கானம் பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

4. இணை இயக்குநர்(பொது) மற்றும்
ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28 (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.